# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 57 | 4 Pages | 27.09.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 57 | 4 பக்கங்கள் | 27.09.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## 13 ஆயிரம் பேர் அகதிகளாகும் அவலம்: அர்மேனியா அஜர்பைஜான் போர் எதிரொலி

அர்மேனியா,செப்.27

ஐரோப்பாவிலிருந்து ஆசிய கண்டம் வரை ஐக்கிய சோவியத் சோஷலிஸ குடியரசு எனும் பெயரில் ஒருங்கிணைந்த பல நாடுகளுடன் 1922ல் இருந்த வந்த கூட்டமைப்பு, 1991ல் 15 நாடுகளாக உடைந்தது. இவற்றில் அஜர்பை ஜான் மற்றும் அர்மேனியா ஆகிய இரு நாடுகளுக்கிடையே கருங்கடலுக்கும் கேஸ்பியன் கடலுக்குமிடையே உள்ள தெற்கு காகஸஸ் மலைப்பகுதியை யொட்டி உள்ள நகோர்னோகராபாக் பிராந்தியத்திற்கு உரிமை கொண்டாடி போர் நடைபெற்று வருகிறது. 2020ல் 6 வாரங்களாக நடைபெற்ற மிக பெரிய




போரில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். இந்நிலையில் இப்பகுதியில் வசித்து வந்த 1 லட்சத்து 20 ஆயிரம் மக்களில் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இப்பகுதியிலிருந்து அர்மேனியாவிற்குள் அகதிகளாக நுழைந்திருக்கி ன்றனர். கடந்த வாரம், இப்பகுதியை அஜர்பைஜான் கைப்பற்றியதிலிருந்து உயிருக்கு ஆபத்து ஏற்படும் அச்சத்தில் தங்கள் உடைமைகளை விட்டு விட்டு அர்மேனியாவிற்குள் நுழைந்திருக்கிறார்கள். அப்பகுதியில் காலங்காலமாக வசித்து வந்த அர் மேனியர்களை அஜர்பைஜான்வாசிகளாக மாற்ற போவதாக அஜர்பைஜான் எச்சரித்திருந்தது. இவர்களுக்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் செய்து தர அர்மேனியா முன் வந்திருக்கிறது.

## அஜர்பைஜனில் எரிவாயு நிலையத்தில் பயங்கர வெடி விபத்து 20 பேர் உயிரிழப்பு

அஜர்பைஜன்,செப்.27

அஜர்பைஜனில் உள்ள ஸ்டெபனகெர்ட் பகுதி வெளியே எரிவாயு நிலையம் இயங்கி வருகிறது. இங்கு நேற்று பிற்பகுதியில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். இதில், சம்பவ இடத்தில் இருந்து 13 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், ஏழு பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் தெரிய வந்துள்ளது. மேலும், 290க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் பலர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் பிராந்தியத்தின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மூன்று தசாப்த கால பிரிவினைவாத ஆட்சிக்குப் பின்னர் அஜர்பைஜானின் பிராந்



தியத்தை முழுமையாக மீட்பதற்காக கடந்த வாரம் இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டது. இதன் பிறகு, நாகோர்னோகராபாக்கின் ஆயிரக்கணக்கான குடியிருப்பாளர்கள் ஆர்மீனியாவிற்கு இப்பகுதியை விட்டு வெளியேறினர். அப்போது இந்த வெடி விபத்து ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் தாக்குதலில் ரஷிய கடற்படை தளபதி கொல்லப்பட்டாரா? பரபரப்பு தகவல்கள்

கிவ்,செப்.27

உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் தொடங்கி 1½ ஆண்டுகளை தாண்டிவிட்டது. ஆனாலும் இன்னும் இந்த சண்டை முடிவுக்கு வந்தபாடில்லை. உக்ரைனுக்கு அமெரிக்க உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகள் செய்து வருவதால் ரஷிய படையை எதிர்த்து உக்ரைன் வீரர்கள் ஆக்ரோஷத்துடன் போரிட்டு வருகின்றனர். உக்ரைனின் சில நகரங்களை ரஷியபடையினர் கைப்பற்றி உள்ளனர். அவற்றை உக்ரைன் வீரர்கள் பேராடி மீட்டு வருகின்றனர். ரஷியாவின் ராணுவ நிலைகளை குறிவைத்து உக்ரைன் வீரர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். சமீபத்தில் ரஷியாவின் கட்டுப்பாட்டில் உள்ள கிரீமியா பகுதியில் உள்ள வெடிமருந்து குடோனில் ஆளில்லா விமானம் (டிரோன்) மூலம் வெடி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினார்கள். இதில் பலத்த சேதம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக இம் மாத தொடக்கத்தில் கிரீமியா தலைநகர் செவஸ்டோ போல் துறைமுகத்தில் உள்ள கருங்கடல் ரஷியா கடற்படை தலைமையகத்தில் உக்ரைன் ஏவு



கணை வீசி தாக்குதலை நடத்தியது. கப்பலில் இருந்து 10க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை உக்ரைன் படை வீசியது. இந்த தாக்குதலில் கருங்கடல் கடற்படை தளபதியும், ரஷ்யாவின் மூத்த கடற்படை அதிகாரிகளுள் ஒருவரான விக்டர் சோகோலோவ் மற்றும் 33 அதிகாரிகள் கொல்லப்பட்டதாக உக்ரைன் படை தெரிவித்து உள்ளது. ஆனால் இந்த தகவலை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் இதுவரை உறுதிபடுத்தவில்லை. இதனால் இந்த ஏவுகணை தாக்குதலில் கடற்படை தளபதி இறந்தாரா? என்பதில் மர்மம் நீடித்து வருகிறது. தாக்குதல் நடத்தப்பட்ட கிரீமியா பகுதியை உக்ரைனிடம் இருந்து ரஷியா கைப்பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

## நைஜரில் உள்ள 1500 ராணுவ வீரர்கள் வெளியேற்றம் பிரான்சு அறிவிப்பு

நைஜர்,செப்.26

மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜர் இதற்கு முன்பு பிரான்ஸ் கட்டுப்பாட்டில் இருந்தது. கடந்த 1960ம் ஆண்டுக்கு பிறகு நைஜர் சுதந்திர நாடாக உருவெடுத்தது. இருந்தபோதிலும் நைஜர் நாட்டில் பிரான்ஸ் தனது ஆதிக்கத்தை காட்டி வந்தது. தனது நாட்டின் ராணுவ வீரர்கள் 1500 பேரை பிரான்ஸ் நைஜரில் நிலை நிறுத்தி இருந்தது. பிரான்சுக்கு ஆதரவாக அந்நாட்டு அதிபர் முகமது பாசும் இருந்து வந்தார். இந்நிலையில் அவருக்கு எதிராக அந்நாட்டு ராணுவம் திரும்பியது. அதிபர் பதவியில் இருந்து முகமது பாசுவை அகற்றி விட்டு நைஜரில் ராணுவ ஆட்சி வந்தது. இந்நிலையில் அந்த நாட்டில்




நிறுத்தப்பட்டு இருந்த 1500 வீரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்து உள்ளார். அவரின் இந்த அறிவிப்புக்கு நைஜர் ராணுவ ஆட்சியாளர்கள் வரவேற்பு தெரிவித்து உள்ளனர்.

# தமிழ்நாடு சுற்றுலா கொள்கை2023: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

சென்னை,செப்.27

சுற்றுலாத்துறையில் ஈடுபட்டு வரும் பல்வேறு நிலையிலான பங்குதாரர்களின் நீண்டகால கோரிக்கையை சுற்றுலா கொள்கை பூர்த்தி செய்கிறது. சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஆண்டு முழுவதும் சுற்றுலா பயணிகள் வருகை தருவதற்கு ஏற்ற இடமாக தமிழ்நாட்டை உயர்த்துவதையும், சுற்றுலா பயணிகளின் தங்கும் காலத்தை அதிகரிப்பதையும், அன்னிய செலாவணியை ஈர்க்கும் வகையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலான வசதிகளை, கட்டமைப்புகளை அதிகப்படுத்தும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா கொள்கை உருவாக்கப்பட்டு உள்ளது. தமிழ்நாடு சுற்றுலா




கொள்கை2023யை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை செயலகத்தில் வெளியிட்டார். இந்தக் கொள்கையானது சுற்றுலா திட்டங்களுக்கு தொழில் அந்தஸ்தை வழங்குகிறது, இதன்மூலம் இது வரைதொழில்துறைதிட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதே பலன்களை சுற்றுலா துறைக்கும் விரிவுபடுத்தி, சுற்றுலாத்துறையில் ஈடுபட்டு வரும் பல்வேறு நிலையிலான பங்குதாரர்களின் நீண்டகால கோரிக்கையை சுற்றுலா கொள்கை பூர்த்தி செய்கிறது. நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதைதொடர்ந்துதகவல்தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்துறையின் கீழ், தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான ஆசிரியர் பட்டயப்பயிற்சியில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பு மற்றும் தமிழ்நாடு மின்னணுநிறுவனத்தின்ஒருங்கிணைந்த இணைய தளத்தினையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

# 2 நாட்கள் டாஸ்மாக் கடைகள் மூடல்

திருப்பூர்,செப்.27

மிலாது நபி வருகிற 28 ந் தேதியும், காந்தி ஜெயந்தி அக்டோபர் 2 ந்தேதியும் கடைப்பிடிக்கப்படுகிறது.

மது விற்பனை செய்யப்படும் நபர்களின் மீது உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். திருப்பூர் மாவட்டத்தில் மிலாது நபி, காந்தி ஜெயந்தி தினத்தன்று மதுபானக் கடைகளை அடைக்க கலெக்டர் கிறிஸ்துராஜ் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம்





வருமாறு: திருப்பூர் மாவட்டத்தில் மிலாது நபி வருகிற 28 ந் தேதியும், காந்தி ஜெயந்தி அக்டோபர் 2 ந்தேதியும் கடைப்பிடிக்கப்படுகிறது.

அன்றைய தினங்களில் மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் மதுபானக்கடைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மதுக்கூடங்கள், மதுபானக்கூடங்களுடன் செயல்படும் மனமகிழ் மன்றங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட நாட்களில் மது விற்பனை செய்யப்படும் நபர்களின் மீது உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது

# வங்கி கடன் உதவி பெற்று வேளாண் தொழில் தொடங்க பட்டதாரிகளுக்கு மானியம்

திருப்பூர்,செப்.27

வேளாண்மையை வளர்ச்சி அடைய செய்யும் நோக்கத்தில் இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோர் ஆக்குதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 21 முதல் 40 வயதுடையவராகவும் அரசு மற்றும் தனியார் நிறுவனத்தில் பணிபுரியாதவராகவும் கணினி திறனுடன் இருத்தல் அவசியம். வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களை கொண்டு வளர்ந்து வரும் தொழில்நுட்ப அறிவை வேளாண்மையில் ஈடுபடுத்தி, வேளாண்மையை வளர்ச்சி அடைய செய்யும் நோக்கத்தில் இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோர் ஆக்குதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் வங்கிக்கடன் உதவி பெற்று வேளாண் சார்ந்த தொழில் துவங்கும் பட்டதாரிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. தகுதிகளானது வேளாண்மை , தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல் பட்டப்படிப்பு பிரிவில் குறைந்தபட்சம் இளநிலையில் முடித்திருக்க வேண்டும். பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் அல்லது வேளாண்மை



உட்கட்டமைப்பு நிதி திட்டம் அல்லது வங்கி கடன் உதவியுடன் வேளாண்சார்ந்ததொழில்தொடங்க வேண்டும். இத்திட்டத்தில் பயன் பெற விரும்புவோர் 21 முதல் 40 வயதுடையவராகவும் அரசு மற்றும் தனியார் நிறுவனத்தில் பணிபுரியாதவராகவும் இருக்க வேண்டும். கணினி திறன் பெற்றிருக்க வேண்டும். குடும்பத்திற்கு ஒரு வேளாண் பட்டதாரி மட்டுமே நிதி உதவி பெற தகுதி உடையவர். வங்கி மூலம் கடன் பெற்று தொழில் புரிகின்ற நிறுவனத்தின் உரிமையானது தனி உரிமையாக இருக்க வேண்டும். தேவையான ஆவணங்களாவன 10 மற்றும் 12ம் வகுப்பு சான்றிதழ், பட்டப்படிப்பு சான்றிதழ், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, துவங்க உத்தேசித்துள்ள வேளாண் தொழில் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை, வங்கி கணக்கு புத்தகம், வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் ஒப்புதல் ஆவணம் ஆகியவை ஆகும். 202324 ம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் 52 கிராம பஞ்சாயத்துகளில் தொழில் துவங்க விண்ணப்பிக்கும் வேளாண் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் அல்லது வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதி உதவி பெற்று வங்கி கடனுடன் வேளாண்சார்ந்த தொழிலைதுவங்க முன்வரும் வேளாண் பட்டதாரிகளுக்கு சிறப்பு முன்னுரிமை வழங்கப்படும். மேற்கண்ட திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதி உதவி, வட்டி மானியம் போக கூடுதல் மானியமாக விரிவான திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த திட்ட மதிப்பீட்டில் 50 சதவீத மானியம், அதிகபட்சமாக ரூபாய் ஒரு லட்சம் வரை, வங்கி கடன்ஒப்புதல் பெற்ற பிறகு பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தில் பதிவு செய்ய விருப்பம் உள்ள பட்டதாரிகள் அக்ரிஸ்நெட் இணைய முகப்பில் பதிவு செய்ய வேண்டும். தங்களின் விரிவான திட்டஅறிக்கையை சம்மந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநரிடம் சமர்ப்பிக்கவேண்டும். கூடுதல் விவரங்களுக்கு வட்டார வேளாண் உதவி இயக்குநர்அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம் என திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

# வங்கி மேலாளர் பதவிக்கான தேர்வுக்கு ஆதி திராவிடர்பழங்குடியின மாணவர்களுக்கு இலவச பயிற்சி

திருப்பூர்,செப்.26

எஸ்பிஐ., வங்கியின்துணை மேலாளர் பதவிக்கான தேர்வில் வெற்றி பெற ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களுக்கு தாட்கோ நிறுவனம் மூலம் இலவச பயிற்சி வழங்கப்படவுள்ளது என்று திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம் வருமாறு: எஸ்பிஐ., வங்கியின் துணை மேலாளர் பணிக்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி 2000 துணை மேலாளர் பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இத்தேர்வில் பங்கேற்க 21 முதல் 35 வயது வரை உள்ள ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் வரும் செப்டம்பர் 27 ந் தேதிக்குள் இணைய தளத்தின் வழியாக விண்ணப்பிக்கலாம். இந்த தேர்வு முதற்கட்ட தேர்வு, முதன்மை, நேர்காணல் மற்றும் குழுப்பயிற்சி என 3 நிலைகளில் நடைபெறவுள்ளது. இந்தப்பதவிக்கான ஆரம்பகால மாத ஊதியம் ரூ.41,960 ஆகும். இந்தத் தேர்வில் வெற்றி பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு பயிற்சி நிலையத்தின் மூலமாக இலவச பயிற்சியை வழங்க தட்கோ நிறுவனம் முடிவு செய்துள்ளது. இந்த பயிற்சியை பெற விரும்பும் மாணவர்கள் www.tahdco.com என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 9445029552, 04212971112 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அங்கக விவசாயிகள் நம்மாழ்வார் விருது பெற விண்ணப்பிக்கலாம்




திருப்பூர்,செப்.27

அங்கக கழிவுகளை நன்றாக மக்க செய்து அவற்றில் உள்ள ஊட்டச்சத்துகளை மண்ணிற்கு அளித்து பயிர்கள் கிரகித்துக் கொள்ள உதவுகின்றன. குறைந்தபட்சம் 3ஆண்டுகள் அங்கக வேளாண்மையில் ஈடுபட்டிருக்க வேண்டும். அங்கக வேளாண்மை என்பது செயற்கை ரசாயன உரம், பூச்சிக்கொல்லி ஆகியவற்றை தவிர்த்து இயற்கையுடன் இணைந்த உயிரியல் சுழற்சி, இயற்கை மற்றும் அங்கக எரு பயன்படுத்துதல் மூலம் பயிர் பாதுகாப்பு மற்றும் பயிர் சாகுபடி செய்யப்படுவதோடு மண்வளத்தையும் பாதுகாப்பதே ஆகும். அங்கக வேளாண்மையில் மண்ணில்உள்ளநுண்ணுயிர்கள் அங்கக கழிவுகளை நன்றாக மக்க செய்து அவற்றில் உள்ள ஊட்டச்சத்துகளை மண்ணிற்கு அளித்து பயிர்கள் கிரகித்துக் கொள்ள உதவுகின்றன. நுண்ணுயிர்கள் ஊட்டச்சத்துகளை மெதுவாகவும், சீராகவும் வெளியிடுகின்றன. இதனால் மாசற்ற சூழலில் பயிர்கள் வளர்வதனால் நஞ்சற்ற விளை பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். வேளாண்மைத்துறை மூலம் நடப்பாண்டில், அங்கக வேளாண் நடைமுறைகளை பின்பற்றி சிறப்பாக செயல்படும் தன்னார்வ விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அங்கக விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது வழங்கப்படும்.நம்மாழ்வார் விருது பெற விரும்பும் விவசாயிகள் அக்ரிஸ் நெட் வலைதளத்தில்நவம்பர் மாதம் 30ந் தேதிக்குள் https://www.tnagrisnet.tn.gov.in பதிவுக்கட்டணம்ரூ.100 செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். பங்கேற்பதற்கான தகுதிகள்:குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் பரப்பில் அங்கக வேளாண்மையில் சாகுபடி செய்தல் வேண்டும். முழுநேர அங்கக விவசாயியாக இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் 3ஆண்டுகள் அங்கக வேளாண்மையில் ஈடுபட்டிருக்க வேண்டும். அங்கக வேளாண்மைக்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். மதிப்பீட்டுக்குழு: மாவட்ட அளவிலான மதிப்பீட்டுக்குழு மற்றும் மாநில அளவிலான தேர்வுக்குழு மூலம் வெற்றியாளர்கள் தீர்மானிக்க ப்படுவர்பரிசுத்தொகை:வெற்றி பெறும் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசால் நம்மாழ்வார் பெயரில்ரொக்கப் பரிசு, சான்றிதழ் மற்றும் பதக்கம் தமிழ்நாடு முதலமைச்சரால் குடியரசு தினத்தன்று வழங்கப்படும். முதல் பரிசு ரூ.2.5 லட்சம் மற்றும் ரூ.10,000மதிப்புடைய பதக்கம், இரண்டாம்பரிசு ரூ.1.5 லட்சம் மற்றும் ரூ.7,000மதிப்புடைய பதக்கம், மூன்றாம் பரிசு ரூ.1 லட்சம் மற்றும் ரூ.5,000 மதிப்புடைய பதக்கம். மேலும், நம்மாழ்வார் விருதுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் வழிமுறைகளை தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களைஅணுகி பெற்றுக்கொள்ளலாம் என கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்து ள்ளார்.

# சாயமிடும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த தொழிற்பயிற்சி மையம் அமைக்க திட்டம்



திருப்பூர்,செப்.27

திருப்பூர் சுற்றுப்பகுதியில்300க்கும் அதிகமானசாய ஆலைகள் இயங்கி வருகின்றன. புதிய பணியாளர் திடீரென பணியில் சேர்ந்து அனைத்து பணிகளையும் செய்ய முடியாது. திருப்பூர் சுற்றுப்பகுதியில் 300க்கும் அதிகமான சாய ஆலைகள் இயங்கி வருகின்றன. மத்திய, மாநில அரசு மானிய உதவியுடன் , பொது சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. சாய ஆலைகளில் சாயமிடுவதில் பல்வேறு ரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தரமாக சாயமிடுவதற்காக உப்பும் பயன்படுத்தப்படுகிறது. சாயம், ரசாயனம் போன்றவற்றை பயன்படுத்த வேண்டியிருப்பதால் தொழில்நுட்ப பயிற்சி பெற்ற நபர்கள் மட்டுமே அப்பணிகளை செய்ய முடிகிறது.

இதேபோல் சுத்திகரிப்பு நிலையத்தில் ஒவ்வொரு பிரிவிலும், தொழில்நுட்ப அனுபவம் வாய்ந்த நபர்கள் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். மற்ற தொழில்களை போல் சாய ஆலைகளிலும் வடமாநில தொழிலாளர்கள் பணியில் சேர்ந்து வருகின்றனர். புதியபணியாளர்திடீரென பணியில் சேர்ந்து அனைத்து பணிகளையும் செய்ய முடியாது. நீண்ட நாள் பணி செய்தால் மட்டுமே தெரிந்து கொள்ள முடியும். அதற்காக பயிற்சி பெற வேண்டிய கட்டாயம் உள்ளது. இதுவரை அதற்கான பயிற்சி மையம் திருப்பூரில் இல்லை.

இந்நிலையில் தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி கழகத்துடன் (சிட்ரா) இணைந்து திருப்பூரிலேயே சாயமிடும் தொழில்நுட்பம் குறித்த தொழிற்பயிற்சி மையம் அமைக்க திருப்பூர் சாய ஆலை உரிமையாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது. சிட்ராவின் தர பரிசோதனை கூடமும் சங்க வளாகத்தில் இயங்கி வருகிறது.

# நிலத்தடி நீர்மட்டம் குறைவதால் பயிர்கள் கருகும் அபாயம்




திருப்பூர்,செப்.27

ஆழ்துளை கிணறு அமைத்த போதும், விவசாயத்துக்கு போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. அவிநாசி அத்திக்கடவு திட்டம் துவக்கப்பட்டதில் இருந்து மூன்று ஆண்டுக்குள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். தொடர்வறட்சியால் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் ஆயிரம் அடிக்கு கீழ் சென்றுள்ளது. ஆழ்துளை கிணறு அமைத்த போதும், விவசாயத்துக்கு போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. குடிநீர் பற்றாக்குறையும் ஏற்பட்டு வருகிறது.

விவசாயத்தையும், குடிநீர் தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் அவிநாசி அத்திக்கடவு திட்டம் உருவாக்கப்பட்டது. பவானி ஆற்று நீரை, குழாய்கள்மூலம்கொண்டு வந்து கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட குளம், குட்டைகளுக்கு நீர் நிரப்புவதற்கானதிட்டப்பணிகள் முடிவடைந்து ள்ளன. குளம், கு ட்டைகளில் நீர் ஏற்றி சோதனை ஓட்டமும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அவிநாசி அத்திக்கடவு திட்டம் இன்னும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படாதது, விவசாயிகள், பொதுமக்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

திருப்பூர் கோட்ட அளவிலான குறைகேட்பு கூட்டம் அவிநாசி தாலுகா அலுவலகத்தில் நடந்தது. இதில் அவிநாசி அத்திக்கடவு திட்டத்தை விரைந்து செயல்படுத்தக்கோரி விவசாயிகள் குரல் எழுப்பினர். கோரிக்கை மனுக்களும் அளித்துள்ளனர். விவசாயிகள் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: பருவ மழை பொய்த்ததால், அவிநாசி, ஊத்துக்குளி தாலுகா பகுதிகளிலும் திருப்பூர் வடக்கு சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட பொங்குபாளையம், கணக்கம்பாளையம், காளிபாளையம், பெருமாநல்லூர், ஈட்டிவீரம்பாளையம், வள்ளிபுரம், தொரவலூர், மேற்குபதி, சொக்கனூர், பட்டம்பாளையம் ஊராட்சிகளில் வறட்சி நிலவுகிறது. இப்பகுதிகளில் விவசாயிகள், நடப்பு ஆண்டு வைகாசி பட்டத்தில் 10ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலக்கடலை பயிரிட்டிருந்தனர். கோடை மழை பெய்யாததால் கடலை செடிகள், பூ, பிஞ்சுடன் காய்ந்து போய் விட்டன. வறட்சியால் ஆழ்துளை கிணறுகள், திறந்த வெளி கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்துள்ளது. பாசனத்துக்கு தண்ணீர்கிடைக்காமல் விவசாயிகள் பரித விக்கின்றனர். பொதுமக்களுக்கும் குடிநீர் பற்றாக்குறை பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அவிநாசி அத்திக்கடவு திட்டம் துவக்க ப்பட்டதில் இருந்து மூன்று ஆண்டுக்குள் முடிக்கப்ப ட்டிருக்க வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்த திட்டத்தை இன்னும் செயல்பாட்டுக்கு கொண்டுவராதது ஏமாற்றம் அளிக்கிறது.தமிழக அரசு அவிநாசி அத்திக்கடவு திட்டம் மூலம், குளம், குட்டைகளுக்கு நீர் நிரப்பி,மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை ஹாட்ஸ்பாட் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த உத்தரவு




திருப்பூர்,செப்.27

டெங்கு காய்ச்சல் பாதிப்பு யாருக்காவது உறுதி செய்யப்பட்டால் உடனடியாக அப்பகுதியில்சிறப்புமுகாம்அமைத்தல் வேண்டும். தனியார் மருத்துவமனைகளில் டெங்கு பாதிப்புடன் ஒருவர் அனுமதியானால் மாவட்ட அளவிலான கண்காணிப்பு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். டெங்கு காய்ச்சல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கி விடும்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநகராட்சி, நகராட்சி அளவில், ஏற்கனவே வகைப்படுத்தப்பட்ட தொற்று பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளை ஹாட்ஸ்பாட் ஆக கண்டறிந்து அப்பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். டெங்கு காய்ச்சல் பாதிப்பு யாருக்காவது உறுதி செய்யப்பட்டால் உடனடியாக அப்பகுதியில் சிறப்பு முகாம் அமைத்து, காய்ச்சல் பாதித்தவர் அவருடன் தொடர்பில் இருந்தவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். செல்போன்குழுக்கள் மூலம் தொடர் கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் என மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குனர்களுக்கு பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. தனியார் மருத்துவமனைகளில் டெங்கு பாதிப்புடன் ஒருவர் அனுமதியானால் மாவட்ட அளவிலான கண்காணிப்பு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். தெரியப்படுத்தாத மருத்துவமனை நிர்வாகத்தினருக்கு 10ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

# பொது இடங்களில் புகைப்பிடிக்கும் பழக்கத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்க கோரிக்கை



திருப்பூர்,செப்.27

பொது இடங்களில் புகைப்பிடித்தாலோ, புகையிலைசார்ந்த பொருட்களை சுவைத்து உமிழ்தல் தண்டனைக்குரிய குற்றமாகும் மூன்று மாதம் வரை ஜெயில் தண்டனையுடன் 500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். பொது இடங்களில் புகைப்பிடித்தாலோ, புகையிலைசார்ந்த பொருட்களை சுவைத்து உமிழ்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். அரசு அலுவலர்களின் ஆய்வின் போது கண்டறியப்பட்டாலோ, உறுதி செய்யப்பட்டலோஉடனடிஅபராதமாக முதன்முறையாக 100 ரூபாய், மீண்டும் அதே குற்றம் தொடர்ந்தால் 200 ரூபாய், 500 ரூபாய் வரை வசூலிக்கப்படும். மேலும் தொடர்ந்தால் மூன்று மாதம் வரை ஜெயில் தண்டனையுடன் 500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். இவ்வாறு சட்டம் இருப்பது குறித்த விழிப்புணர்வை, திருப்பூர் மாவட்டத்தில் சுகாதார துறையினர் ஏற்படுத்த வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சில இடங்களில் போலீசாருடன் சேர்ந்து, அபராத நடவடிக்கைகளை எப்போதாவது தான் பார்க்க முடிகிறது. இதனால் டீக்கடை, பஸ் நிலையம் என பல்வேறு இடங்களில் பலரும் புகைக்கின்றனர். பொது இடங்களில் புகைப்பிடிக்கும் பழக்கத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்க கோரிக்கைகுறிப்பாக பஸ் நிலையத்தில் சிறார்கள் சிலர் எப்போதும் புகைத்தவாறு நிற்கின்ற னர். போலீசார் உதவியுடன் சுகாதாரத்துறையினர் களமிறங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தொல்லியல் துறைக்கு தனி அலுவலகம் அமைக்க வேண்டும்: வரலாற்று ஆய்வாளர்கள் வலியுறுத்தல்

உடுமலை, மடத்துக்குளம் தாலுகா வழியாக செல்லும் அமராவதி ஆற்றின் கரையில், பல்வேறு பழமையான தொல்லியல் சின்னங்கள், நாணயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தொல்லியல் சின்னங்களை பாதுகாக்க வேண்டும் என்ற வரலாற்று ஆய்வாளர்களின் கோரிக்கை கண்டுகொள்ளப்படாமல் உள்ளது. மேலும் படிக்க உடுமலை: கோவை, ஈரோடு மாவட்டங்களில் இருந்து 6 தாலுகாவை பிரித்து திருப்பூர் மாவட்டம் 2009ல், உருவாக்கப்பட்டது. திருப்பூர் மாவட்டத்தில் பல்வேறு பழமையான கோவில்கள், வரலாற்றுச்சின்னங்கள் அதிக அளவு உள்ளன. குறிப்பாக உடுமலை, மடத்துக்குளம் தாலுகா வழியாக செல்லும் அமராவதி ஆற்றின் கரையில், பல்வேறு பழமையான தொல்லியல் சின்னங்கள், நாணயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. சங்க காலத்திலிருந்தே சிறப்பு பெற்றிருந்த கோவில்கள், நொய்யல் மற்றும் அமராவதி ஆற்றங்கரையில் தற்போது வரை வரலாற்றுச்சின்னங்களாக உள்ளன. இக்கோவில்களில்பலநூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு ஆவணப்படுத்த ப்பட்டுள்ளன. இதே போல் உடுமலை, மடத்துக்குளம் தாலுகாவிலும், வரலாற்று ஆய்வாளர்களால் பெருங்கற்காலத்தைச்சேர்ந்த கல்திட்டைகள் மற்றும் அக்கால மனிதர்கள் பயன்படுத்திய ஆபரணங்கள், பொருட்கள், மேற்பரப்பு ஆய்வில் கிடைத்து ள்ளது. கடத்தூர், கொழுமம், கண்ணாடிப்புத்தூர், சோமவாரப்பட்டி, கொங்கல்நகரம், குடிமங்கலம், கோட்டமங்கலம்உட்படபல இடங்களில் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுகளும், கல்திட்டை உட்பட பெருங்கற்காலத்தைசேர்ந்த வரலாற்று சின்னங்களும் உள்ளன. சமீபத்தில் மடத்துக்குளம் ஒன்றியம், மெட்ராத்தி கிராமத்தில் குளத்தின் கரையில் இருந்த பாறை கல்வெட்டு, போதிய விழிப்புணர்வு இல்லாமல் சிதைக்கப்பட்டு, முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது.இதேபோல் கல்வெட்டுகளை அழித்தல், நடுகற்கள் மற்றும் சிற்பங்களை சேதப்படுத்துதல் தொடர் கதையாக உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் சின்னங்களைபாதுகாக்கவேண்டும் என்ற வரலாற்று ஆய்வாளர்களின் கோரிக்கை கண்டுகொள்ளப்படாமல் உள்ளது.தற்போது திருப்பூர் மாவட்டத்துக்குட்பட்ட தொல்லியல் சார்ந்த பணிகளில் கோவை மாவட்டத்தைச்சேர்ந்த மாவட்ட தொல்லியல்துறை அலுவலர்களே மேற்கொண்டு வருகின்றனர். எனவே திருப்பூர் மாவட்டத்துக்கு தனியாக மாவட்ட தொல்லியல்துறை அலுவலகத்தை துவக்க வேண்டும் என வரலாற்று ஆய்வாளர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனால் தொழில்சார்ந்த மாவட்ட மக்களுக்கு, முக்கிய சுற்றுலா தலமாகவும், அருங்காட்சியகம் அமைய வாய்ப்புள்ளது. இதுகுறித்து வரலாற்று ஆய்வாளர்கள் தரப்பில் அரசுக்கு மீண்டும் கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# மழைக்கால நோய்களில் இருந்து கால்நடைகளை பாதுகாப்பது எப்படி? விவசாயிகளுக்கு அதிகாரிகள் அறிவுரை



உடுமலை,செப்.27

ஆனைமலை, நெகமம் போன்ற பகுதிகளை சேர்ந்த மக்களுக்கு ஆடு, மாடு மற்றும் கோழி போன்ற கால் நடை வளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது. மழைக்காலங்களில் ஈரமான புற்கள் அளிக்காமல் சற்று உலர வைத்து அல்லது உலர் தீவனமான வைக்கோல் மற்றும் கடலைக் கொடியுடன் அளித்தல் வேண்டும். ஆனைமலை, நெகமம் போன்ற பகுதிகளை சேர்ந்த மக்களுக்கு ஆடு, மாடு மற்றும் கோழி போன்றகால்நடைவளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது. இந்த நிலையில், விரைவில் பருவமழை தீவிரமடைய உள்ளது. இதனையடுத்து, மழை காலங்களில் கால்நடைகளை எவ்வாறு நோய்களில் இருந்து பாதுகாப்பது என்பது குறித்து அரசு கால்நடைத்துறையினர்விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். அதன்படி கால்நடைத்துறை அதிகாரிகள் வழங்கிய அறிவுரைகள் வருமாறு: கால்நடைகள் அதிக நேரம் மழையில் நனையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கொட்டகையில் நீர்த்தேங்க விடக்கூடாது. நீர்த்தேங்குவதன் மூலம் ஒட்டுண்ணி பிரச்சினைகள், சளி மற்றும் கொளம்பு அழுதல் போன்ற நோய் அதிகரிக்கும். குறிப்பாக ஆடு மற்றும் செம்மறி ஆடுகள் அதிகம் பாதிக்கப்படும். எனவே, சீரான வடிகால் அமைத்தல் அவசியம். குளிர் மற்றும் ஈரப்பதம் அதிகரிக்கும் சமயங்களில் சாம்பிராணி மற்றும் வேப்பங் கொட்டை கலந்து கொட்டகையில் காலை மற்றும் மாலை வேலைகளில் புகை மூட்டுதல் வேண்டும். சுத்தமான குடிநீர் அளித்தல் அவசியம். மழைக்காலங்களில் ஈரமான புற்கள் அளிக்காமல் சற்று உலர வைத்து அல்லது உலர் தீவனமான வைக்கோல் மற்றும் கடலைக் கொடியுடன் அளித்தல் வேண்டும். குளிர்காலங்களில் குட்டிகளை நோய் பாதிப்பில் இருந்து பாதுகாக்க போதிய சூட்டினை தர வேண்டும். அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடுதல் அவசியம். குறிப்பாக கோமாரி, ஆட்டுக் கொல்லி மற்றும் துள்ளுமாரி நோய்களுக்கு தடுப்பூசி போட்டிருக்க வேண்டும். மடி நோய் வராமல் இருக்க கொட்டகை மற்றும் மாட்டின் மடியை சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். கோழி கொட்டகையின் தரைப்பகுதியை ஈரம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.ஈரம் அதிகமானால் ரத்த கழிச்சல் நோய் பரவி பேரிழப்பு ஏற்படுத்தும். அக ஒட்டுண்ணிப் பிரச்சினைகளில் இருந்து கால்நடைகளை காத்துக் கொள்ள இயற்கை மருந்துகளான கோமியம் அல்லது தண்ணீர் 10 லிட்டர், நொச்சி இலை கரைசல் 50 கிராம், உன்னிச்செடி கரைசல் 50 கிராம், வசம்பு 50 கிராம் கலந்து கால்நடை கொட்டகையில் தெளிக்க வேண்டும். இந்த முறையை பயன்படுத்தி கால்நடைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்கள் அறிவுறுத்தி வருகின்றனர்.

# காகித அட்டைப்பெட்டி தயாரிப்புக்கான ஜி.எஸ்.டி., வரியை குறைக்க வேண்டும் உற்பத்தியாளர்கள் சங்கம் வலியுறுத்தல்




திருப்பூர்,செப்.27

இத்தொழில் மூலம் 30 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். விசைத்தறி தொழில் பயிற்சி அளிப்பது போல காகித அட்டைப்பெட்டி தொழில் பயிற்சி அளித்து வேலைக்கு ஆட்களை தயார் செய்ய வேண்டும். கோவை மண்டல தென்னிந்திய அட்டைப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்க கூட்டம் நடைபெற்றது. இதில் சங்கத்தலைவர் சிவகுமார் நிருபர்களிடம் கூறியதாவது: கோவை மண்டலத்தில் திருப்பூர், ஈரோடு, நீலகிரி, நாமக்கல், கரூர், சேலம் ஆகிய மாவட்டங்கள் உள்ளன. இதில் 700 அட்டைப்பெட்டி தயாரிப்பு உற்பத்திக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழில் மூலம் 30 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். தினசரி ரூ. 3.5 கோடி மதிப்பிலான அட்டைப்பெட்டி உற்பத்தி செய்யப்படுகிறது. மின்கட்டணத்தை குறைக்க வேண்டும். காகிதத்துக்கு 12 சதவீதம் ஜி.எஸ்.டி. வரி உள்ளது. ஆனால் காகித அட்டைப்பெட்டிக்கு 18 சதவீதம் ஜி.எஸ்.டி. வரி உள்ளது.

இதனை 12 சதவீதமாக குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விசைத்தறி தொழில் பயிற்சி அளிப்பது போல காகித அட்டைப்பெட்டி தொழில் பயிற்சி அளித்து வேலைக்கு ஆட்களை தயார் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்றுமதி வரி சலுகை அளிப்பதோடு வெளிநாட்டில் இருந்துஆர்டர்கள்கிடைக்க மத்திய அரசின் தொழில் துறை உதவ வேண்டும். காகித அட்டைப்பெட்டி தொழில்மேம்பாடுஅடைய சர்வதேச அளவிலான கண்காட்சிகளை மத்திய அரசு நடத்த வேண்டும்.

காகித அட்டைப்பெட்டி தயாரித்தல் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் பொருளாதாரம் மேம்பாடும் வகையில் மத்திய, மாநில அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை மனுக்களை அளிக்கவுள்ளேன் என்றார்.

# முன்னாள் மாணவர் கல்வி அறக்கட்டளை செயற்குழு கூட்டம்




அவிநாசி,செப்.27

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு அறக்கட்டளைத் தலைவர் என்.ஆர். பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.நீட்தேர்வு,ஐ.ஏ.எஸ்., டி.என்.பி.எஸ்.சி. ஆகிய போட்டி தேர்வுகளுக்கு சிறப்புபயிற்சிகளைமாணவர்களுக்கு அளிப்பது பற்றிவிவாதிக்கப்பட்டது. அவிநாசி அரசு உயர்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர் கல்வி அறக்கட்டளைசெயற்குழு கூட்டம் நடைபெற்றது.தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு அறக்கட்டளைத் தலைவர் என்.ஆர். பாலகிருஷ்ணன்தலைமை வகித்தார். துணைத் தலைவர் சண்முகசுந்தரம், செயலாளர் நடராசன், பொருளாளர் கணேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயற்குழு உறுப்பினர்கள் டி.எம்.அருணாசலம், சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் நீட் தேர்வு, ஐ.ஏ.எஸ்., டி.என்.பி. எஸ்.சி. ஆகிய போட்டி தேர்வுகளுக்கு சிறப்பு பயிற்சிகளை மாணவர்களுக்கு அளிப்பது, அவிநாசி அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில்10,12ம்வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கு அக்டோபர் 3 ந்தேதி ஊக்கத் தொகை, பரிசுகள்வழங்குவது, அவிநாசி அரசு உயர்நிலைப்பள்ளியில் 1978ம் ஆண்டு வரைபணியாற்றிய ஆசிரியர்கள், 80 வயது நிறைந்த அறக்கட்டளை உறுப்பினர்கள், ஆண்டுதோறும் கல்வி ஊக்கத்தொகை வழங்குவோர் ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கும் வகையில் நவம்பர் 5ந் தேதி முப்பெரும் விழா நடத்துவது என்பன உள்ளிட்டபல்வேறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# உடுமலை நாராயணகவி பிறந்தநாள் விழா: உருவச்சிலைக்கு கலெக்டர் மாலை அணிவித்து மரியாதை



உடுமலை,செப்.27

நினைவு மண்டபத்தில் உள்ள நாராயகவி உருவசிலைக்கு கலெக்டர் கிறிஸ்துராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தமிழ்நாடு அரசு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது வழங்கி சிறப்பித்தது. திருப்பூர் மாவட்டம் உடுமலை பகுத்தறிவு கவிராயர் உடுமலை நாராயணகவிபிறந்தநாளையொட்டி உடுமலை நினைவு மண்டபத்தில் உள்ள நாராயகவி உருவசிலைக்கு கலெக்டர் கிறிஸ்துராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது: திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம் பூளவாடி கிராமத்தில் கிருஷ்ணசாமி செட்டியார் முத்தம்மாள் தம்பதியினருக்கு 25.9.1899ம் ஆண்டு மகனாக உடுமலை நாராயணகவி பிறந்தார். பொது உடமை, சமத்துவம், பெண் விடுதலை, சுயமரியாதை போன்ற முற்போக்கு சிந்தனைகளை பெரியாரிடம் கற்றறிந்தார். விடுதலை போராட்டத்தின் போது தேசிய உணர்வு மிக்க பாடல்களை எழுதி மேடை தோறும் முழங்கியவர் ஆவார்.75 திரைப்படங்களுக்கு மேல் பாடல்களை எழுதியுள்ளார். தமிழ் திரைப்பட பாடல் உலகின் முடிசூடா மன்னராக திகழ்ந்த உடுமலைநாராயணகவி பகுத்தறிவு கவிஞர் ஆவார். இவரது பாடல்களின் சிறப்பை பாராட்டி22.4.1967 ம் ஆண்டு சங்கீத நாடக சங்கத்தின் சார்பில் சாகித்யா ரத்னா விருது வழங்கப்பட்டது. அதே ஆண்டில் தமிழ்நாடு அரசு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது வழங்கி சிறப்பித்தது. மேலும் இவர் பாரதிதாசன், பாபநாசம் சிவன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கவிஞர் கண்ணதாசன், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை முதலான கவிஞர் பெருமக்களுடன் நெருங்கிய நட்புண்டு சிறப்பான பணியை வெளிப்படுத்தினார்.26.6.1944 ல் திருச்சியில் நடைபெற்ற அண்ணாவின் ஓர் இரவு நாடகத்தில்இவரதுபாடல் இடம் பெற்றது. இவர் தமது முதுமை காலத்தில் தனது சொந்த ஊரான பூளவாடி கிராமத்தில் 23.5.1981ல் காலமானார். இவரது நினைவாக முன்னாள் முதலமைச்சர் கலைஞரால் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் 23.2.2001 அன்று திறந்து வைக்கப்பட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவரின் பிறந்த நாளை முன்னிட்டு உடுமலைப்பேட்டை குட்டைதிடல்அருகில்அமைந்துள்ள நினைவு மண்டபத்தில் உள்ள நாராயணகவியின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இவ்வாறு கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்தார். விழாவில் உதவி கலெக்டர் (பயிற்சி) கிர்திகா எஸ்.விஜயன் , திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன்,உடுமலை வருவாய் கோட்டாட்சியர்ஜஸ்வந்த் கண்ணன், உடுமலை நகர்மன்றத்தலைவர் மத்தின், உடுமலை ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் மகாலட்சுமி, அரசு அலுவலர்கள், உடுமலை நாராயண கவியின் வாரிசுதாரர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ரோட்டோரம் இறங்கி விபத்தில் சிக்கிய பஸ்



பு.புளியம்பட்டி,செப்.27

பஸ் இருசக்கரவாகனத்தின் மேல் மோதாமல் இருக்க டிரைவர் திருப்பினார். பஸ் ரோட்டோரம் சிறிது தூரம் சென்று மோதி நின்றது. ஈரோடு மாவட்டம் புஞ்சைபுளியம்பட்டி வழியாக நல்லூர் சத்திய மங்கலம் ரோட்டில் ஒரு அரசு பஸ் பயணிகளை ஏற்றிக் கொண்டு சத்திய மங்கலத்துக்கு சென்று கொண்டிருந்தது. அப்போது அந்த வழியாக ஒருவர்இருசக்கர வாகனத்தில் வந்தார். தொடர்ந்து அவர் ரோட்டின் குறுக்கே வந்ததாக கூறப்படுகிறது. அப்போது பஸ் இருசக்கரவாகனத்தின் மேல் மோதாமல் இருக்க டிரைவர் திருப்பினார். அப்போது கட்டுபபாட்டை இழந்த பஸ் எதிர்பாராத விதமாக ரோட்டை விட்டு கீழே இறங்கி இழுத்து சென்றது. இதையடுத்து அந்த பஸ் ரோட்டோரம் சிறிது தூரம் சென்று மோதி நின்றது. இதை கண்டு பஸ்சில் இருந்தவர்கள் அலறி துடித்தனர். இதில் பயணிகள் அனைவரும் காயமின்றி உயிர் தப்பினர். மேலும் விபத்தில் பஸ்சின் முன் பகுதி மற்றும் பின் பகுதி சேதம் அடைந்தது. இது குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து போலீசார் சம்பவ இடத்து க்கு வந்து விபத்து குறித்து விசாரணை நடத்தி வரு கிறார்கள். இதையடுத்து கிரைன் எந்திரங்கள் வரவழைக்கப்பட்டு அதன் மூலம் பஸ்வை மீட்டனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது.

# மதுரை மத்திய சிறையில் கைதி தற்கொலை

மதுரை,செப்.27

பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கும் மதுரை சிறையில் கைதி தற்கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. முதலுதவி அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக மதுரைஅரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். தேனி மாவட்டம் உத்தமபாளையம் கே.எம்.பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் அஜித்குமார் (வயது 28). இவர் மீது மூன்று கொலை வழக்குகள் மற்றும் ஒரு கொலை முயற்சி வழக்குகள் நிலுவையில் உள்ளது. இவருக்கு கஞ்சா பழக்கமும் இருந்து வந்துள்ளது. கொலை வழக்கில் தண்டனை பெற்று மதுரை மத்திய சிறையில் இவரும், இவரது தந்தையும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அடைக்கப்பட்டு இருந்தனர். சமீபத்தில் அவரது தந்தைக்கு ஜாமின் கிடைத்து வெளியே சென்றார். ஆனால் அஜித்குமாருக்கு ஜாமின் கிடைக்காததால் தொடர்ந்து அவர் மனஅழுத்தத்தில் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது. கஞ்சா பழக்கத்தற்கு அடிமையாகி இருந்ததால் அவர் மனநலம் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தார். இந்த நிலையில் நேற்று வழக்கின் வாய்தாவிற்காக தேனி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகி விட்டு மாலை மதுரை மத்திய சிறைக்கு கொண்டு வரப்பட்டார். இதற்கிடையே சில மாதங்களாக தனக்கு தானே பேசிக் கொள்வதுமாகவும் இருந்துள்ளார்.

இதனால் அவருக்கு மனநல சிகிச்சையும் அளிக்கப்பட்டு வந்தது. இதற்காக மனநோயாளிகள் சிகிச்சை பெறுபவர்களுக்கான தனி சிறை ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு அவர் அடைக்கப்பட்டு இருந்தார். இந்த நிலையில் இன்று காலை 9.30 மணிக்கு வழக்கம் போல் உணவு அருந்தி விட்டு வந்தவர் திடீரென மின்விசிறியில் துண்டை மாட்டி தற்கொலைக்கு முயன்றார். இதைக்கண்ட சிறைக்காவலர்களும், சக கைதிகளும் அவரை மீட்டு முதலுதவி சிகிச்சைக்காக ரெயில்வே மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர். பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கும் மதுரை சிறையில் கைதி தற்கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பெங்களூருக்கு செல்லும் 44 பஸ்கள் ஒசூர் வரை இயக்கம்

வேலூர்,செப்.27

பஸ்கள் பயணிகள் கூட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது கர்நாடக மாநிலத்தில் இன்று பந்த் அறிவிக்கப்பட்டதால் நடவடிக்கை காவிரி பிரச்சினையால் கர்நாடக மாநிலத்தில் இன்று பந்த் அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக தமிழகத்தில் இருந்து கர்நாடக மாநிலம் பெங்களூருக்கு செல்லும் அரசு பஸ்கள் இன்று காலை முதல் தமிழக எல்லையான ஒசூர் பகுதி வரை இயக்கப்படுகிறது. அதன்படி வேலூர் போக்குவரத்து மண்டலத்துக்கு உட்பட்ட வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து பெங்களூருக்கு செல்லும் 44 அரசு பஸ்கள் இன்று வழக்கமான நேரத்தில் இயக்கப்பட்டன.

இந்த பஸ்கள் அனைத்தும் ஒசூர் வரை மட்டுமே இயக்கப்பட்டது.

இதில் முழு அடைப்பு காரணமாக பெரும்பாலான பஸ்கள் பயணிகள் கூட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது.

# திருப்பூரில் அரங்கம் நிறைந்த காட்சியாக நடைபெறும் அப்பல்லோ சர்க்கஸ்வருகிற 2ந்தேதி நிறைவு பெறுகிறது




பெருமாநல்லூர்,செப்.27

உலக புகழ் பெற்ற அப்பல்லோ சர்க்கஸ் கடந்த 4ந்தேதி முதல் தொடங்கி, அரங்கம் நிறைந்த காட்சிகளாக நடைபெற்று வருகிறது. குழந்தைகளை குதூகலிக்க செய்யும் கோமாளிகளின் அட்டகாசம் சிரிப்பை வர வைக்கிறது. திருப்பூர் மாநகர் பெருமாநல்லூர் சாலை, பூலுவபட்டி பிரிவு அருகில் உலக புகழ் பெற்ற அப்பல்லோ சர்க்கஸ் கடந்த 4ந்தேதி முதல் தொடங்கி, அரங்கம் நிறைந்த காட்சிகளாக நடைபெற்று வருகிறது. மிகச்சிறந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சியாகவும், சர்க்கஸ் கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் நிகழ்ச்சியாகவும் நடந்து வருகிறது. தினமும் மதியம் 1 மணி, மாலை 4 மணி, இரவு 7 மணி என 3 காட்சிகளாக நடந்து வருகிறது. ஒவ்வொரு காட்சிக்கும் 25க்கும் மேற்பட்ட சாகச நிகழ்ச்சிகளை சர்க்கஸ் கலைஞர்கள் பொதுமக்கள் மத்தியில் மிகவும் நேர்த்தியாகவும், அழகாகவும் செய்து காட்டுகின்றனர். அந்தரத்தில் தொங்கி கொண்டு சர்க்கஸ் கலைஞர்கள் அசத்தும் சாகசங்கள் பார்வையாளர்களை பரவசம் அடைய வைக்கிறது. வருகிற 2ந்தேதி சர்க்கஸ் காட்சி நிறைவு பெறுகிறது. சர்க்கசில் வன விலங்குகள், செல்லப்பிராணிகள் என்று உயிரினங்கள் பயன்படுத்துவதற்கு தடை இருக்கும் காரணத்தால், முழுக்க முழுக்க சர்க்கஸ் கலைஞர்களின் திறமையை மட்டுமே வைத்து அப்பல்லோ சர்க்கஸ் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. குழந்தைகளை குதூகலிக்க செய்யும் கோமாளிகளின் அட்டகாசம் சிரிப்பை வர வைக்கிறது. தற்போது பள்ளி காலாண்டு விடுமுறையை முன்னிட்டு பள்ளி குழந்தைகளுக்கு கட்டண சலுகையும் வழங்கப்படுகிறது. இதனால் மாணவ மாணவிகள் அதிக அளவில் அழைத்து வரப்படுகிறார்கள். அந்தரத்தில் சர்க்கஸ் கலைஞர்கள் பறந்து பறந்து செய்யும் பார் விளையாட்டு சாகச காட்சிகள், நீண்ட சேலையை தொங்கவிட்டு பெண் கலைஞர் ஒருவரும், ஆண்பெண் ஜோடி கலைஞர்களும் செய்யும் சாகசங்கள் மனதை மயக்குவதாக உள்ளது. மணிப்பூர், நாகலாந்து மாநில கலைஞர்கள் ஈட்டி முனையில் நெஞ்சு, முதுகு வைத்து செய்யும் சாகசங்கள் மயிர்கூச்செரிய செய்கிறது. அவர்களின் ஜிம்னாஸ்டிக் விளையாட்டுகள், நாற்காலிசண்டை விளையாட்டுகள் பார்வையாளர்களை உற்சாகப்படுத்துகிறது. வழக்கமான சைக்கிள் சாகசம், உலக உருண்டை கூண்டுக்குள் லாவகமாக மோட்டார் சைக்கிள் ஓட்டும் வீரர்களின் சாகசம், துப்பாக்கி சுடும் நேர்த்தி என்று காட்சிக்கு காட்சி பார்வையாளர்களை குதூகல ப்படுத்துகிறது. இதுபோல் பல விதவிதமான சர்க்கஸ் காட்சிகள் பார்வையாளர்களை, கிட்டத்தட்ட 3 மணி நேரம் எந்தவித கவலையும் இன்றி உற்சாகப்படுத்துகிறது. 20 நாட்களுக்கு மேலாக நடைபெற்று வரும் இந்த அப்பல்லோ சர்க்கஸ் வருகிற 2ந்தேதி நிறைவு பெறுகிறது, மேற்கண்ட தகவலை சர்க்கஸ் மேலாளர் பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

# ரூ.42 கோடி கடன் தொழில் நஷ்டத்தால் ஆன்லைனில் விஷம் வாங்கி குடித்து நூற்பாலை அதிபர் தற்கொலை



வடவள்ளி,செப்.27

கடனை கொடுத்தவர்கள் பணத்தை திரும்ப கேட்டு தொந்தரவு கொடுக்க தொடங்கி உள்ளனர். தொழில் நஷ்டத்தால் தொழில் அதிபர் விஷம் குடித்து தற்கொலை செய்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. கோவை விளாங்குறிச்சி, எஸ்.ஆர். அவென்யூவை சேர்ந்தவர் வித்யா சங்கர்(வயது 44). தொழில் அதிபர். இவருக்கு திருமணம் ஆகி பிந்து என்ற மனைவியும், 15 வயதில் ராகவ் என்ற மகனும் உள்ளனர். வித்யா சங்கர் திருப்பூரில் சொந்தமாக நூல் தயாரித்து விற்கும் நிறுவனம் நடத்தி வருகிறார். வித்யா சங்கர் தனது தொழிலை மேலும் விரிவுபடுத்துவதற்காவும், தொழிலுக்காகவும், வங்கி மற்றும் தனக்கு தெரிந்த நபர்களிடம் இருந்து கடன் வாங்கி இருந்தார். மொத்தமாக ரூ.42 கோடி வரை கடன் வாங்கி யதாக கூறப்படுகி றது. வாங்கிய கடனுக்கு மாதம் தவறாமல் குறிப்பிட்ட நாட்களிலும் பணத்தையும் செலுத்தி வந்தார். ஆனால், கடந்த சில மாதங்களாகவே அவருக்கு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவருக்கு வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியவில்லை. இதற்கிடையே கடனை கொடுத்தவர்கள் பணத்தை திரும்ப கேட்டு தொந்தரவு கொடுக்க தொடங்கி உள்ளனர். தினமும் போன் போட்டு தொந்தரவு செய்ததால் வித்யாசங்கர் கடந்த சில நாட்களாகவே மிகுந்த மன உளைச்சலில் இருந்துள்ளார். நேற்று வழக்கம் போல் வீட்டில் இருந்து தனது காரில் கம்பெனிக்கு புறப்பட்டார். ஆனால் அவர் திருப்பூருக்கு செல்லாமல் நேராக தொண்டாமுத்தூர் குள்ளாகவுண்டன் புதூர் பகுதிக்கு சென்று தனது காரை நிறுத்தினார். தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதாலும், கடன் கொடுத்தவர்கள் திருப்பி கேட்டு தொந்தரவு கொடுத்து வந்ததாலும் மன உளைச்சலில் இருந்த வித்யா சங்கர் தற்கொலை செய்வது என முடிவு செய்தார். இதையடுத்து அவர், ஆன்லைனில் விஷம் ஆர்டர் செய்து வாங்கினார். பின்னர் காரின் பின் இருக்கையில் அமர்ந்து விஷத்தை குடித்தார். சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தார். இந்த நிலையில் காலையில் இருந்து மாலை வரை அந்த பகுதியிலேயே கார் நின்றதாலும், போன் அடித்தும் யாரும் எடுக்காததாலும் அந்த பகுதி பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. உடனடியாக அவர்கள் சம்பவம் குறித்து தொண்டாமுத்தூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். பின்னர் காருக்குள் ஏறி பார்த்த போது,அங்குவித்யாசங்கர் இறந்த நிலையில் பிணமாக கிடந்தார். போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து அவரது குடும்பத்தினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் ஆஸ்பத்திரிக்கு விரைந்து வந்து வித்யா சங்கரின் உடலை பார்த்து கதறி அழுதனர். இது அங்கிருந்தவர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியது. போலீசார், வித்யா சங்கரின் காரில் இருந்த லேப்டாப், டைரி உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்து, சோதனையிட்டனர். அப்போது டைரியில் வித்யா சங்கர் தான் யாரிடம் எல்லாம் இருந்து கடன் பெற்றுள்ளேன் என்பது குறித்தும், அந்த நபர்களின் பெயர்களையும் விரிவாக எழுதியிருந்தார். அந்த தகவல்களை போலீசார் கைப்பற்றி தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். தொழில் நஷ்டத்தால் தொழில் அதிபர் விஷம் குடித்து தற்கொலை செய்த சம்பவம் கோவையில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஒண்டிப்புதூரில் ரெயில் மறியலுக்கு முயன்ற 300 பேர் கைது



கோவை,செப்.27

10க்கும் மேற்பட்ட பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் கேட் முன்பு திரண்டனர்ரெயில்வேமேம்பாலம் அமைக்க வலியுறுத்தி அதிகாரிகளுடன் வாக்குவாதம் ஒண்டிப்புதூர் ராமச்சந்திர நாயுடு வீதியில் ரெயில்வே கேட் உள்ளது. இங்கு 2011ம் ஆண்டு மேம்பாலம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த ஜூன் மாதம் இங்கு மேம்பாலம் கட்டப்படாது என அறிவிக்கப்பட்டது. இதனால் இந்த ரயில்வே கேட் மூடப்படும் என ரெயில்வே நிர்வாகம் அறிவித்ததுடன் இந்த பகுதியை சேர்ந்த மக்கள் சென்றுவர மாற்று பாதையும் அமைத்து கொடுக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பொதுமக்கள் அந்தப் பகுதியில் உடனடியாக மேம்பாலம் அமைக்க கோரி ரெயிலில் மறியலில் ஈடுபடப்போவதாக அறிவித்தனர். சக்தி நகர், சிவலிங்கபுரம், காமாட்சி நகர், சூர்யா நகர் உட்பட 10க்கும் மேற்பட்ட பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் இன்று காலை ரெயில்வே கேட் முன்பு திரண்டனர். இதனால் அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இதனையடுத்து அவர்கள் தங்களது கோரிக்கைகளைவலியுறுத்திகோஷம் எழுப்பினர். ரெயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட தண்டவாளத்திற்கு செல்ல முயன்றனர். அங்கு பாதுகாப்பு ஈடுபட்டிருந்த போலீசார் தடுத்து நிறுத்தி 300க்கும் மேற்பட்டோர்களை கைது செய்தனர். பின்னர் அவர்களை அந்த பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் அடைத்தனர். இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகையில், '' நாங்கள் எங்கள் பகுதியில் இருந்து திருச்சி சாலை வரவேண்டும் என்றால் ஒரு கிலோ மீட்டர் தூரம் தான் ஆகும். ஆனால்தற்போது அமைக்கப்பட்டுள்ள மாற்று பாதை வழியாக வரும் போது 4 கிலோ மீட்டர் தூரம் சுற்றி செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே இந்த பகுதியில் உடனடியாக மேம்பாலம் அமைத்து தர வேண்டும் என்றனர்.

# பேரூராட்சி துணைத்தலைவர் விஷம் குடித்து தற்கொலை



பெருந்துறை,செப்.27

சக்திகுமார் மனமுடைந்து சம்பவத்தன்று விஷம் குடித்து வீட்டில் மயங்கி விழுந்தார். பெருந்துறை போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஈரோடு மாவட்டம் பெருந்துறை ஒன்றியம் கருமாண்டி செல்லி பாளையம் பேரூராட்சியின் துணைத்தலைவராக தி.மு.க.வை சேர்ந்த சக்திகுமார் (வயது 39) இருந்தார். இவருடைய மனைவி வனிதா. இவர்களுக்கு சஞ்சய் (14) என்ற மகன் உள்ளார். இந்த நிலையில் சக்திகுமார் உடல்நிலை சரியில்லாமல் அவதிப்பட்டு வந்தார்.

இதற்கு அவர் சிகிச்சை பெற்றும் வந்தார். இதன் காரணமாக சக்திகுமார் மனமுடைந்து சம்பவத்தன்று விஷம் குடித்து வீட்டில் மயங்கி விழுந்தார். உடனே அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக ஈரோட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி சக்திகுமார் பரிதாபமாக இறந்தார்.

இதுகுறித்து பெருந்துறை போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## தமிழ் ஹீரோ என்னை துன்புறுத்தினார் நித்யா மேனன் பரபரப்பு குற்றச்சாட்டு

நானி நடித்த 'வெப்பம்' படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு கதாநாயகியாக அறிமுகமானவர் நித்யா மேனன். அதன்பின்னர் 'ஓகே கண்மணி', 'காஞ்சனா 2', '24', 'மெர்சல்' போன்ற படங்களில் நடித்து அனைவரையும் கவர்ந்தார். கடந்த ஆண்டு இவர் தனுஷுடன் இணைந்து நடித்து வெளியான 'திருச்சிற்றம்பலம்' திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. குறிப்பாக இவர் நடித்த தேன் மொழி கதாப்பாத்திரன் பலரின் கவனத்தை ஈர்த்திருந்தது. தமிழ், தெலுங்கு, மலையாளம் என பல மொழி படங்களில் நடித்து வரும் நித்யா மேனன் தமிழ் நடிகர் ஒருவர் படப்பிடிப்பில் தன்னை துன்புறுத்தியதாக குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து நேர்காணல் ஒன்றில் பேசிய அவர், "தெலுங்கு திரையுலகில் நான் எந்த விதமான பிரச்சினையையும் எதிர்கொண்டதில்லை. ஆனால் தமிழ் திரையுலகில் நிறைய பிரச்சினைகளை எதிர்கொண்டு இருக்கிறேன். தமிழ் ஹீரோ ஒருவர் என்னை படப்பிடிப்பில் துன்புறுத்தினார்" என்று பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.



## மீண்டும் வெளியாகும் துல்கர் சல்மானின் 'கிங் ஆஃப் கோதா'

இயக்குனர் அபிலாஷ் ஜோஷி இயக்கத்தில் துல்கர் சல்மான் நடித்துள்ள திரைப்படம் 'கிங் ஆஃப் கோதா'. ஜீ ஸ்டுடியோஸ் மற்றும் வேஃபேரர் ஃபிலிம்ஸ் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது. ஜேக்ஸ் பிஜாய் மற்றும் ஷான் ரஹ்மான் இணைந்து இசையமைத்துள்ள இப்படத்திற்கு நிமிஷ் ரவி ஒளிப்பதிவு செய்துள்ளார்.

'கிங் ஆஃப் கோதா' திரைப்படம் ஆகஸ்ட் 24ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இந்நிலையில், இப்படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'கிங் ஆஃப் கோதா' திரைப்படம் வருகிற 29ஆம் தேதி ஹாட் ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளது.

இதனை படக்குழு வீடியோ ஒன்றை பகிர்ந்து அறிவித்துள்ளனர்.

## ஒரே நேரத்தில் படப்பிடிப்பை தொடங்கும் விஜய்அஜித்.. எதிர்பார்ப்பில் ரசிகர்கள்

தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித், துணிவு படத்தை தொடர்ந்து 'விடாமுயற்சி' படத்தில் நடிக்கிறார். இப்படத்தை தடையறத் தாக்க, மீகாமன், தடம், கலகத் தலைவன் உள்ளிட்ட படங்களை இயக்கிய மகிழ்த்திரு மேனி இயக்குகிறார். அனிருத் இசையமைக்கும் இப்படத்தை லைகா தயாரிப்பு நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தின் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு பல மாதங்களுக்கு முன்பே வெளியான நிலையில் தற்போது வரை படப்பிடிப்பு தொடங்கப் படாமல் உள்ளது. இப்படம் கைவிடப்பட்டதா? என ரசிகர்கள் கேள்வி எழுப்பி வந்ததையடுத்து சமீபத்தில் படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் என தயாரிப்பு நிறுவனம் அறிவித்திருந்தது. இந்நிலையில், 'விடாமுயற்சி' படத்தின் புதிய தக



வல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் படப்பிடிப்பு அக்டோபர் 4ஆம் தேதி அபுதாபியில் தொடங்கவுள்ளதாக கூறப்படுகிறது. இந்த முறையாவது படப்பிடிப்பு தொடங்குமா? என்ற எதிர்பார்ப்பில் அஜித் ரசிகர்கள் உள்ளனர். வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'தளபதி 68' படத்தின் படப்பிடிப்பு அக்டோபர் முதல் வாரத்தில் தொடங்கவுள்ளதாக தகவல் வெளியானது குறிப்பிடத்தக்கது.

## அடுத்தடுத்த படங்களில் பிஸியாகும் வசந்த் ரவி

வளர்ந்து வரும் நடிகர்களில் ஒருவரான வசந்த் ரவி வித்தியாசமான கதைகளை மட்டுமே தேர்வு செய்து நடித்து வருகிறார்.

இவரின் அறிமுக படமான தரமணி பலரின் பாராட்டை பெற்றது. அப்படத்தை தொடர்ந்துவெளியானராக்கிமற்றும்அஸ்வின்ஸ்திரைப்படங்கள்ரசிகர்களிடையே நல்ல வரவேற்பையும் யார் இந்த வசந்த் ரவி என்ற கேள்வியையும் எழ வைத்தது.

இப்படத்தைதொடர்ந்துநெல்சன்இயக்கத்தில்ரஜினிகாந்த்நடிப்பில்வெளியான ஜெயிலர் படத்தில் அர்ஜூன் முத்துவேல் பாண்டியன் என்ற கதாப்பாத்திரத்தில் ரஜினியின் மகனாக நடித்திருந்தார். இந்த படத்தில் எதிர்மறையான கதாபாத்திரத்தில் நடித்திருந்த இவரின் நடிப்பு அனைவராலும் பேசப்பட்டது. ஜெயிலர் படத்தின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து தற்போது அடுத்தடுத்த படங்களில் பிஸியாக நடித்து வருகிறார் வசந்த் ரவி. வெப்பன் எனும் படத்தில் சத்யராஜுடன் இணைந்து முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.



இந்தப்படத்தில்அதிகஅளவுதுப்பாக்கிகளைகையாளும்சண்டைக்காட்சிகளில் இவர் நடித்துள்ளாராம். இதற்குப் பிறகு ஒரு மிகப்பெரிய இயக்குனருடன் புதிய படம் ஒன்றில் ஒப்பந்தம் ஆகி உள்ளாராம் வசந்த ரவி.

## நடிகை வஹீதா ரஹ்மானுக்கு தாதா சாகேப் பால்கே விருது அறிவிப்பு



இந்திய சினிமாவின் பழம்பெரும் நடிகைகளுள் ஒருவர் வஹீதா ரஹ்மான். செங்கல்பட்டில் பிறந்த இவர் பல பாலிவுட் படங்களில் நடித்து பிரபலமானார். இவர் தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், பெங்காலி போன்ற பல மொழி படங்களிலும் நடித்துள்ளார். எம்.ஜி.ஆரின் அலிபாபாவும் 40 திருடர்களும் திரைப்படத்தில் நடித்துள்ள வஹீதா ரஹ்மான் கடைசியாக தமிழில் கமல்ஹாசன் நடிப்பில் 2018ஆம் ஆண்டு வெளியான 'விஸ்வரூபம் 2' திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இவர் பத்ம ஸ்ரீ, பத்ம பூஷன் போன்ற உயரிய விருதுகளையும் வென்றுள்ளார். இந்நிலையில், நடிகை வஹீதா ரஹ்மானுக்கு 'தாதா சாகேப் பால்கே' வாழ்நாள் சாதனையாளர்விருதுஅறிவிக்கப்பட்டுள்ளது. இதனைமத்தியஅமைச்சர்அனுராக் தாக்கூர் தனது சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்து தெரிவித்துள்ளார்.

## உயிர் உலக் புகைப்படத்தை பகிர்ந்த விக்னேஷ் சிவன்



திரையுலகின் பிரபலங்களான நயன்தாரா விக்னேஷ் சிவன் தம்பதி காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.

இவர்கள் வாடகைத் தாய் மூலம் இரட்டைக் குழந்தைகளுக்கு பெற்றோர் ஆனர். உயிர் ருத்ரோ நீல் உலக் தெய்வக் என தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிட்டுள்ள நயன் விக்னேஷ் தம்பதி, தொடர்ந்து குழந்தைகளின் புகைப்படங்களை இணையத்தில் பதிவிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இயக்குனர் விக்னேஷ் சிவன் தனது குழந்தைகளின் பழைய (Throwback) புகைப்படத்தை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படத்தை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் அதிகம் பகிர்ந்து லைக்குகளை குவித்து வருகின்றனர்.



## ஆசிய விளையாட்டு போட்டி: 3வது தங்கம் வென்றது இந்தியா லைவ் அப்டேட்ஸ்

ஆசிய விளையாட்டு போட்டி கடந்த 23ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. ஆசிய விளையாட்டு தொடரின் பாய்மர படகுப் போட்டியில் மகளிர் Dinghy ILCA4 பிரிவில் இந்தியாவின் நேஹா தாகூர் வெள்ளிப் பதக்கம் வென்றார். 11 ரேஸ்களில் 27 புள்ளிகள் பெற்று வெள்ளி பதக்கத்தை இந்தியா வென்றது. இதன் மூலம் இந்தியா வாங்கிய பதக்கங்களின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது. இந்திய அணி இதுவரை 2 தங்கம், 4 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தம் 12 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

பதக்க பட்டியலில் இந்தியா 6வது இடத்தில் உள்ளது. பதக்கப் பட்டியல் விவரம் வருமாறு:

சீனா ( 40 தங்கம், 21 வெள்ளி, 9 வெண்கலம்) 70 பதக்கங்கள் தென் கொரியா (11 தங்கம், 10 வெள்ளி, 15 வெண்கலம்) 36 பதக்கங்கள் ஜப்பான் (5 தங்கம், 14 வெள்ளி, 12 வெண்கலம்) 21 பதக்கங்கள் உஸ்பெஸ்கிஸ்தான் 4 தங்கம், 5 வெள்ளி, 6 வெண்கலம்) 15 பதக்கங்கள் ஹாங்காங் ( 3 தங்கம், 4 வெள்ளி, 7 வெண்கலம்) 14 பதக்கங்கள் இந்தியா (3 தங்கம், 4 வெள்ளி, 6 வெண்கலம்) 13 பதக்கங்கள்

## ஆசிய விளையாட்டு போட்டி 2023 ஆண்கள் ஹாக்கியில் இந்தியா 16 1 என அபார வெற்றி

ஆசிய விளையாட்டு போட்டி கடந்த 23ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்திய அணி 2 தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தம் 11 பதக்கங்களைப் பெற்றுள்ளது. இந்நிலையில், இன்று ஆண்கள் ஹாக்கி பிரிவில் இந்திய அணி, சிங்கப்பூர் அணியும் மோதின. முதல் பாதி முடிவில் இந்திய அணி 60 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் இந்திய அணி கோல் மழை பொழிந்தது. இறுதியில் இந்தியா 161 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

## ஆசிய விளையாட்டு போட்டி 2023 ஸ்குவாஷ் போட்டியில் இந்திய அணி வெற்றி

ஆசியவிளையாட்டுபோட்டிகடந்த23ம்தேதிதொடங்கி நடைபெற்று வருகிறது. இந்திய அணி 2 தங்கம், 4 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தம் 12 பதக்கங்களைப் பெற்றுள்ளது. ஆசிய விளையாட்டின் ஸ்குவாஷ் போட்டியில் இன்று ஆண்கள் அணிகள் பிரிவில் சவுரவ் கோஷ், அபய்சிங், மகேஷ் மங்கோன்கர், ஹரிந்தர் பால் சந்து ஆகியோரை கொண்ட இந்திய அணி 30 என்ற



கணக்கில் சிங்கப்பூரை வீழ்த்தியது. இதேபோல், பெண்கள் அணிகள் பிரிவில் ஜோஷ்னா சின்னப்பா, அனாஹத் சிங், தன்வி கண்ணா ஆகியோர் அடங்கிய இந்திய அணி 30 என்ற கணக்கில் பாகிஸ்தானை தோற்கடித்தது.






## உலகக் கோப்பை தொடர்: இந்தியா வந்த ஆப்கானிஸ்தான் வீரர்களுக்கு பட்டாடையுடன் வரவேற்பு!

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) 50 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அடுத்த வாரம் துவங்க இருக்கிறது. இந்தியாவில் நடைபெற இருக்கும் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்க ஒவ்வொரு அணியும் சிறப்பான முறையில் தயாராகி வருகிறது. 2023 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் கலந்து கொள்வதற்காக ஆப்கானிஸ்தான் அணி இந்தியா வந்தடைந்தது. இந்தியா வந்த ஆப்கானிஸ்தான் அணியினருக்கு பட்டாடை அணிவித்து பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. இது தொடர்பான புகைப்படங்கள் எக்ஸ் தளத்தில் வெளியாகி உள்ளன. ஆப்கானிஸ்கான் அணி உலகக் கோப்பை தொடரின் முதல் ஆட்டத்தில் வங்காளதேசம் அணியை எதிர்கொள்கிறது. இந்த போட்டி தர்மசாலாவில் அக்டோபர் 7ம் தேதி நடைபெற இருக்கிறது. இந்த போட்டி, இந்திய நேரப்படி காலை 10.30 மணிக்கு துவங்குகிறது. இது உலகக் கோப்பை தொடரின் மூன்றாவது போட்டி ஆகும். உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணிக்கு ஹஷ்மத்துல்லா சாஹிதி கேப்டனாக இருக்கிறார். இவர் தவிர ரஹமனுல்லா குர்பாஸ், இப்ராஹிம் சாட்ரான், ரியாஸ் ஹாசன், ரகமது ஷா, நஜிபுல்லா சட்ரான், முகமது நபி, இக்ராம் அலிகிள், அசமதுல்லா ஓமர்சாய், ரஷித் கான், முஜீப் உர் ரகுமான், நூர் அகமது, ஃபசல்ஹக் ஃபரூக்கி, அப்துல் ரகுமான் மற்றும் நவீன் உல் ஹக் உள்ளிட்டோர் இடம்பிடித்துள்ளனர்.

## ஆசிய விளையாட்டு போட்டி: படகு போட்டியில் வெள்ளி வென்றது இந்தியா



படகு போட்டியில் மகளிர் Dinghy ILCA4 பிரிவில் இந்தியாவின் நேஹா தாகூர் வெள்ளிப்பதக்கம் வென்றார். 11 ரேஸ்களில் 27 புள்ளிகள் பெற்று வெள்ளி பதக்கத்தை இந்தியா வென்றது. தாய்லாந்தின் நெப்போஸ்ர்ன் தங்க பதக்கமும், சிங்கப்பூர் வெண்கல பதக்கமும் வென்றது.

இதன்மூலம் இந்திய அணி 2 தங்கம், 4 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தம் 12 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.